பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

கடர்: 6 பிரமோதூத ஸ்ரீ மாசி ௴ 25 உ. சனிக்கிழமை (09-03-1991) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 102

# மடு அகதிகள் கருத்தறிய ஐ. நா. அதிகாரி விரைவு!

## ஜெனிவா தலைமையகத்துக்கு உண்மை நிலையை எடுத்துரைப்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 9

மடுவில் உள்ள முகாம் சம்பந்தமாக முடிவெடுக்கும் பொருட்டு, ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரி அங்கு தங்கியிருக்கும் அகதிகளின் கருத்தை நேரில் அறியவுள்ளார்.

அதற்காக இன்று அவர் மடுவுக்கு விஜயம் செய்கிறார். அகதிகளின் கருத்துக்களை நேரில் கேட்டறிந்து அறிக்கையாகத் தயாரித்துக் கொண்டு அவர் ஜெனிவா விரையவுள்ளார்.

மடுவில் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாமை, இராணுவ நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அரசாங்கம் இடமாற்றம் செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

ஆனால் பிரஸ்தாப அகதி முகாமைப் பராமரித்து வரும் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் அரசின் உத்தேச இடமாற்றத்தை ஆட்சேபித்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ரஞ்சன் கொலை; நிரஞ்சன் கைது!

கொழும்பு, மார்ச் 9

அமைச்சர் ரஞ்சன் கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழ் இளைஞர் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு நகரில் உள்ள— தமிழ்க் குழு ஒன்றின்—

[2 ஆம் பக்கம் பார்க்க]

# சீனாவிடமிருந்து கடற்படைக்கு அதி சக்தி வாய்ந்த படகுகள்!

கொழும்பு, மார்ச் 9

ஸ்ரீலங்காக் கடற்படைக்கு சக்தி வாய்ந்த அதிவேக ரோந்துப் படகுகள் மேலும் ஆறு கிடைக்கவுள்ளன.

வடக்கு - கிழக்கு கடலிலும் பாக்குநீரிணையிலும் இந்த ரோந்துப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆறு ரோந்துப் படகுகளில் நான்கு சீனாவில் இருந்து வாங்கப்படவுள்ளன. ஒரு ரோந்துப் படகு உள்நாட்டில் தயாரிக்கப்படும்.

இந்த ஆறு ரோந்துப் படகுகளும் அடுத்த மூன்று மாதங்களில் ஸ்ரீலங்கா கடற்படையில் சேர்ந்து கொள்ளும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு சீன ரோந்துப் படகும் 40 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் வாங்கப்படுகிறது. தற்போது ஸ்ரீ

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப... ஆறாம் கட்டம் ஆறுதலா வருகுது என்று சொல்லுங்கோ.....

## இஸ்ரவேலிய படகுகளை ஸ்ரீலங்கா வாங்காதாம்!

கொழும்பு, மார்ச் 9

இஸ்ரவேலில் இருந்து சுப்பர் டுவோரா [Super Duvora] ரக ரோந்து படகுகளை இனிமேல் வாங்குவதில்லை என்று ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு கடலில் ஸ்ரீலங்கா கடற்படை ரோந்து நடவடிக்கைகளுக்கு இதுவரை காலமும் இஸ்ரவேலில் இருந்து வாங்கிய 'டுவோரா' ரக ரோந்துப் படகுகளையே பயன்படுத்தி வந்தது.

ஆனால், அண்மையில் மொஸாட் ஏஜண்ட் ஒஸ்ட்ரோவ்ஸ்கி தனது புத்தகம் ஒன்றில்—

'டுவோரா' ரக ரோந்து படகுகளை பாவிப்பது எப்படி என்பது பற்றி ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரிகளுக்கும். அந்த ரக படகுகளை அழிப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மக்களைப் பாதுகாக்க தளபதிகளுக்குப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 9

அரசின் கொடுமையான — திட்டமிட்ட — விமானத் தாக்குதலில் இருந்து பொதுமக்களை காப்பாற்ற தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி தமது தளபதிகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-ள]

## மாதாந்தம் ரூ. 7 கோடி வடக்கே அனுப்ப இணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்டத்துக்கு மாதம் ஏழு கோடி ரூபாவை பணமாக அனுப்புவதற்கு அரசாங்கம் சம்மதித்துள்ளது.

மாதம் தோறும் இரண்டு கப்பல்களில் தலா மூன்றரை கோடி ரூபா என்ற அடிப்படையில் அனுப்புவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 'குமண' கப்பலில் மக்கள் வங்கிக்கு மூன்றரைக் கோடி ரூபா வந்து சேரவுள்ளது.

கடந்த மாதம் வரை யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் 5 கோடி ரூபாவை அனுப்பவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. [ஓ-3]

## 6 ஆம் கட்ட நிவாரணம் 15 ஆம் திகதிக்குப் பின்னர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

இடம் பெயர்ந்தோர்—வருமானம் இழந்தோர் ஆகியோருக்கான ஆறாம் கட்டம் உலர் உணவு விநியோகம் எதிர்வரும் 15 ஆம் திகதி அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உணவு விநியோகம் சம்பந்தமாக நேற்று யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தற்போது 50 விதமான உணவுப் பொருள்களே கையிருப்பில் உள்ளன என்றும்—

இன்று கப்பலில் வந்து சேரும் உணவுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அம்பாறையில் மோதல்?

கொழும்பு, மார்ச் 9

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றை சுமார் 40 விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும்—

அதனை முறியடிக்க விமானப்படை ஹெலிக்கொப்டர்கள் மற்றும் விமானங்களை இராணுவத்தினர் பயன்படுத்தியதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் குறித்தும் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்தும் மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரி. பிரதமர் மேஜருக்கு கிடைத்த தோல்வி

லண்டன், மார்ச் 9

இடைத்தேர்தல் ஒன்றில் பிரிட்டிஷ் ஆளும் கன்சேர்வேட்டிவ் கட்சி தனது பாதுகாப்பான தொகுதி ஒன்றை லிபரல் ஜனநாயகக் கட்சியிடம் பறிகொடுத்தது.

ரிவர்வலி தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் 4 ஆயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் லிபரல் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் வெற்றியீட்டினார். பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி மூன்றாவது இடத்தையே பெற முடிந்தது.

பிரதமராக ஜோன் மேஜர் பதவி ஏற்ற பின்னர் ஆளும் கன்சேர்வேட்டிவ் கட்சி அடைந்த முதல் தோல்வி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தோல்வி காரணமாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டியநிலை பிரதமர் மேஜருக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### கஷ்ட நிவாரணப்படி வழங்க

## கூட்டுறவு ஊழியருக்கு ரூ. 80 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ் மாவட்ட கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணப்படி வழங்க உணவு, கூட்டுறவு அமைச்சு 80 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கூட்டுறவு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்தப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

உணவு அமைச்சால் திறைசேரிக்கு இந்தப் பணக் கொடுப்பனவு தொடர்பாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள் விநியோகத்துக்காக ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்க வேண்டிய சேவைக்கட்டணத்தை வழங்கவும் உணவு அமைச்சு நிதி வழங்கியுள்ளது.

[ஒ-3]

### ப. நோ. கூ. சங்கங்களுக்கு

## ரயில் மூலம் மா மூடைகள் வவுனியா வரை வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் விற்பதற்குத் தேவையான மாவை, வவுனியா வரை ரயிலில் எடுத்து வருவதற்கு உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வவுனியாவுக்கு வந்து சேரும் மா மூடைகள் லொறிகளில் இங்கு எடுத்து வரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

### மன்னார்த்தீவு, வவுனியா நகரில்

## இணைப்பு நிலையங்கள் வேண்டாம் என மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கென நடத்தப்படும் க. பொ. சாதாரண, உயர்தர பரீட்சைகளுக்குரிய இணைப்பு நிலையங்களை எக்காரணம் கொண்டும் வவுனியா நகரிலும், மன்னார்த் தீவுப் பகுதிகளிலும் ஏற்படுத்தவேண்டாம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளது.

வங்காலையில் அதிபர், ஆசிரியர்கள் படையினரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவக் கெடுபிடிகள் நிறைந்த மன்னார்த் தீவிற்கும், வவுனியா நகருக்கும் நாளாந்தம் வினாத்தாள்களைச் சேகரிக்கவும், விடைத்தாள்களைக் கையளிக்கவும் போய் வர முடியாது என்று அப்பிரதேச ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்தே ஆசிரியர் சங்கம் மேற்கூறிய இரண்டு இடங்களிலும் பரீட்சை இணைப்பு நிலையங்களை நிறுவ வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளது. [அ]

## ரஞ்சன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அலுவலகத்தைச் சோதனையிட்டபோதே இவர்கள் கைதாகினர் என்று கூறப்பட்டது.

கைதானவர்களில் ஒருவர் நிரஞ்சன் என அழைக்கப்படுபவர் என்றும் —

குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தான் இவர் ஜேர்மனியிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தார் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ-3]

## மடு அகதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யு. டி. கிளாஸ்ரன் அரசிடம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தார். ஆனால் அரசு கேட்பதாக இல்லை.

அதனைத் தொடர்ந்து திரு. கிளாஸ்ரன் ஜெனிவாவில் உள்ள தமது தலைமையக அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க இம்மாதம் 7 ஆம் திகதி அங்கு செல்லவிருந்தார்.

எனினும் முகாமில் தங்கியுள்ள அகதிகளின் கருத்தையும் அறிந்து வருமாறு தலைமையகம் கேட்டிருக்கிறது.

திரு. கிளாஸ்ரன் இன்று மடு சென்று அகதிகளின் கருத்தை அறிந்து கொண்டு இரண்டொரு நாட்களில் ஜெனிவா விரைவார் என்று அறியப்படுகிறது. [அ-3]

## சீனாவிட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லங்கா கடற்படையினர் பாவிக்கும் ரோந்துப் படகுகளில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்களிலும் பார்க்க, மிக நவீன ஆயுதங்கள் புதிய ரோந்துப் படகுகளில் பொருத்தப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடலிலிருந்து. கரைக்குச் சென்று இறங்குவதற்கு பயன்படுத்தப்படும் [Landing Craft] படகு ஒன்றும் சீனாவில் இருந்து ஸ்ரீலங்காக் கடற்படைக்கு விரைவில் கிடைக்கவுள்ளது. தற்போது ஸ்ரீலங்கா கடற்படையிடம் இதுபோன்ற இரண்டு படகுகளே உள்ளன.

## இஸ்ரவேலிய...

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பது எப்படி என்பது பற்றி தமிழ்ப் போராளிகளுக்கும் இஸ்ரவேலில் வைத்து ஒரே சமயத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது என்று எழுதியிருந்தார்.

இதனைத் தொடர்ந்தே இஸ்ரவேலில் இருந்து டுவோரா ரக ரோந்து படகுகளை வாங்குவதில்லை என்று ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஒஸ்ட்ரொவொஸ்கி வெளியிட்ட இத்தகவல்கள் பற்றி கொழும்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று விசாரணை நடத்தி வருகின்றது.

## இளம் ஆசிரியர்கள் அச்சம்

அனலைதீவு, மார்ச் 7

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் கடமை புரியும் வெளியூர்களைச் சேர்ந்த இளம் ஆசிரியர்கள் அங்கு செல்லத் தயங்குகின்றனர்.

நயினாதீவு கடற்படையினரின் கெடுபிடிகளே இதற்குக் காரணம்.

ஆசிரியர்களின் ஒரு பகுதியினர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றதாலும் சிலர் இடமாற்றம் பெற்றதாலும் மீண்டும் இங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

[இ-18]

## முல்லை. வீடமைப்பு அலுவலகம் வவுனிக்குளத்தில் இயங்கும்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம், வவுனிக்குளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்கள விடுதி ஒன்றில் இயங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை அங்கு சமுகமளிக்காத இக்காரியாலயத்தைச் சேர்ந்த ஊழியர்களை வவுனிக்குள அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி. எம்விஜயகுமார் கோரியுள்ளார். [ஒ-எ]

## நவீல்ட் பாடசாலை முழு அளவில் மீண்டும் இயங்குவதில் தடங்கல்

பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாததால் கைதடி நவீல்ட் பாடசாலை முழுமையாக இயங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

350 மாணவர்கள் வரையில் கல்வி பயிலும் இப் பாடசாலையில் விடுதிவசதியை மீண்டும் ஏற்படுத்தி, முழுமையான அளவில் கல்வி வழங்குவதற்கு இப்பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் கோரப்பட்டிருந்தது.

ஆனாலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என அறியவருகிறது.

நவீல்ட் பாடசாலை மிகக் குறைந்த அளவு மாணவர்களுடன் தற்போது பெயரளவிலேயே இயங்கி வருகிறது.

[இ-69]

## தமிழர் நியமனம் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடக்கு - கிழக்கு மாகாண சபை சுகாதாரத் திணைக்களத்தின் புதிய செயலாளராக திரு. எஸ். கருணாபாலா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் ஒரு தமிழரே இப்பதவியை வகித்து வந்தார்.

டாக்டர் எஸ். இரத்தின சபாபதி உதவிச் செயலாளராகவும்; மாகாணசபை சுகாதாரப் பணிப்பாளராகவும் நியமனம் பெற்றுள்ளார். இவர் முன்பு பதில் செயலாளராக கடமையாற்றினார்.

[இ-18]

### புதிய அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபராகப் பதவிவகித்த திரு. க. இராஜேந்திரா ஓய்வு பெற்றதை அடுத்து, புதிய அதிபராக திரு. கே. ஜெயரத்தினம் பதவி ஏற்றுள்ளார்.


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சின்னத்தங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சிறாம்பியடி லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்தங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் செல்வானந்தம், சிவானந்தம் [சிவாமில்], பரமானந்தன், விவேகானந்தன், புனிதவதி, வாலாம்பிகை, மனோன்மணி, பாலதேவி, பத்மாவதி [பேபி] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்கள், உறவினர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வ. சிவானந்தன் (மகன்)
சிவாமில், பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

2, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.

[16082]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைவாபஸ் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும்

வளைகுடாவில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திருப்பி அழைப்பது இவ்வார இறுதியில் இருந்து ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது. தினமும் 5 ஆயிரம் வீரர்கள் வீதம் திருப்பி அழைக்கப்படுவார் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்சேனி தெரிவித்தார். வளைகுடாவில் 5 லட்சத்து 45 ஆயிரம் அமெரிக்கப் படை வீரர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற்போன 30 பத்திரிகையாளர்கள்

ஈராக்கில் இடம்பெற்று வரும் உள்நாட்டுக் கலவரங்களின் ஆரம்பக் கட்டத்தில் பஸ்ரா நகரில் வைத்து காணமற்போனதாகக் கூறப்படும் முப்பது மேற்கு நாட்டுப் பத்திரிகையாளர்கள் பற்றி விசாரணை நடத்த செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று பஸ்ரா நோக்கிப் புறப்பட்டனர்.

## 6,000 பலஸ்தீனர் கைது

குவைத்தில் வாழும் பலஸ்தீனியர்களில் 6 ஆயிரம் பேர் இதுவரை சவூதி மற்றும் குவைத் படையினரால் கைது செய்யப்பட்டு பாடசாலைக் கட்டடங்களிலும், மற்றும் அரசுக் கட்டடங்களிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## பேக்கர் சுற்றுப் பயணம்

வளைகுடா நாடுகளில் சுற்றுப்பயணம் ஒன்றை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ஆரம்பித்துள்ளார். வளைகுடாப் போரின் பின்னர் திரு. பேக்கர் அரபு நாடுகளுக்கும், இஸ்ரவேலுக்கும் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். பலஸ்தீனிய தலைவர்களையும் சந்தித்துப் பேச விரும்புவதாக கூறிய திரு பேக்கர், பலஸ்தீனிய பிரச்சினை தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதற்கு இன்னும் தருணம் வரவில்லை என்று குறிப்பிட்டார்.

## 2,000 பேர் ஒப்படைப்பு

குவைத்தை விட்டு வெளியேறும்போது ஈராக்கிய படைகளால் கடத்திச் செல்லப்பட்ட குவைத் பிரசைகளில் சுமார் 2,000 பேர் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர். பக்தாத்தில் அரசு அதிகாரிகள் அவர்களை ஒப்படைத்தனர். சுமார் 30 ஆயிரம் குவைத் வாசிகளை ஈராக் படையினர் அப்போது கடத்திச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## கெமருச்சுக்கு சீன ஆயுதம்

கம்போடியாவில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள கெமருச் கொரில்லாக் குழுவுக்கு தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கப்போவதாக சீனா நேற்று அறிவித்தது. கம்போடிய பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காணுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சீனாவின் இந்த அறிவிப்பு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## தொலைக்கல்வி முறையில ஆசிரிய பயிற்சி ஏப்ரலில்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக, நியமனம் பெற்றவர்களுக்கான தொலைக் கல்வி முறையிலான ஆசிரிய பயிற்சி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் வெளியிட்டார்.

இதேவேளை, மேற்படி கல்வி நெறிக்கு யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே தமது விண்ணப்பங்களை இதுவரை அனுப்பியுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, இதுவரையில் விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக மஹரகம தேசியக் கல்வி நிறுவனத்துக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அந்த விண்ணப்பத்தில் ஒரு பிரதியை கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்புதல் வேண்டும். இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. [இ-5]

## உதயன்

### ஞாபகம் ஊட்டுதலா?

மோதிக் கொள்வதற்குப் பதிலாக பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. பேச்சுவார்த்தைகளுக்கு இன்னமும் வாய்ப்பு உள்ளது என்பதைத் தெட்டத்தெளிவாகக் கூற விரும்புகிறேன்—

பாதுகாப்புத் துணை அமைச்சராகப் பதவியேற்ற இரண்டு நாட்களின் பின்னர், நாடாளுமன்றத்தில் முதலில் ஆற்றிய உரையில், பிரதமர் திரு. விஜேதுங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

காலஞ்சென்ற முன்னாள் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா காலத்திலும், அரசின் நிலைப்பாடு இதுவே என்று பேச்சளவில் அலங்காரமாகக் கூறப்பட்டு வந்தது.

ஆனால் செயலளவில், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வழங்கிய சந்தர்ப்பத்தைத் தூக்கி எறிந்துவிட்டு இராணுவத் தீர்வை நாடியது அரசாங்கம். ஆகையால் புதிய பாதுகாப்புத் துணை அமைச்சரின் பேச்சு, புதிய போக்கின் அறிகுறி என்றோ, இனப்பிரச்சினை தீர்வதற்கான நம்பிக்கையை ஊட்டுவதாக அமைகிறது என்றோ எடைபோட்டுவிட முடியாது.

இராணுவத் தீர்வை நாம் ஒரு போதும் நாடவில்லை. மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம். மக்களின் உரிமைகளையும், சலுகைகளையுமே பாதுகாக்கின்றோம்— என்ற அவரது அர்த்தம் கூறுதல் வார்த்தைக்கு வார்த்தை, நடைமுறையில் இருந்து நூற்றுக்கு நூறு வீதம் முற்றாக மாறுபட்டது என்பது தமிழர்களைப் பொறுத்த வரையில் மிகத் தெளிவானதாகும்.

மொத்தத்தில் இனப்பிரச்சினையை இணக்கம் கண்டு தீர்ப்பதில்லை என்ற அரசாங்கத்தின் உள்ளார்ந்த எண்ணத்தை— கொள்கையைப்— புதிய பாதுகாப்புத் துணை அமைச்சரின் முதலாவது உரை எடுத்தோதுகிறது! விஜேரத்தினாவும், விஜேதுங்காவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதையே துலாம்பரமாக்குகிறது. புதிய மொந்தையில் அரசின் பழைய, புளித்த கள்ளுத்தான் உள்ளது என்பதைப் புலனாக்குகின்றது.

அதாவது, தமிழர் பிரச்சினையில் அரசாங்கம் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் நின்ற அதே வட்டத்திற்குள் தான் நிற்கிறது; திசையை மாற்றவில்லை என்பதைத் தமிழர்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறார் புதியவர். அவ்வளவு தான்!

# உள்ளூர் சிறு தானியங்களையே ப.நோ.கூ.ச. கொள்வனவு செய்யும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

உள்ளூரில் விளையும் சிறு தானியங்களையே இம்முறை ப.நோ.கூ. சங்கங்கள் கூடுதலாகக் கொள்வனவு செய்ய இருக்கின்றன.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவற்றையே ப.நோ.கூ. சங்கங்கள் கூடுதலாக கொள்வனவு செய்து, சேமித்து வைத்து விநியோகிப்பது வழக்கம்.

ஆனால் இம்முறை குடாநாட்டில் கூடுதலாக உற்பத்தியாகும் பயறு, உழுந்து, தௌபீ, நெல் போன்றவற்றை கொள்வனவு செய்ய ப.நோ.கூ. சங்கங்கள் முடிவு செய்துள்ளன. [இ-3]

## இரு பாடசாலைகள் இயங்க கொட்டகைகள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில், இராணுவ நடவடிக்கைகளால் அழிந்து போன, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் தற்காலிக கொட்டகைகளில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிரஸ்தாப பாடசாலைகளுக்கு கொட்டகைகளை அமைத்துத்தர முன்வந்துள்ளது.

கடந்த வருட ஜூனுக்குப் பின்னர் தீவகப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது மேற்படி இரு பாடசாலைகளும் இடிந்து தரைமட்டமாகின.

தற்பொழுது இவ்விரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் அயலில் உள்ள வீடுகளில் தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

## பெண்கள் மாநாடு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்று சனிக்கிழமை பெண்கள் மாநாட்டையும், பொருள் காட்சியையும் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

காலை 9.00 மணிக்கு நடைபெறும் பொருள்காட்சியில் மகளிர் உற்பத்திக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருள்கள் காட்சிக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்படும்.

பெண்கள் மாநாடு பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகும். [இ]

## நோயாளர் உணவு நிறுத்தம்

நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு கடந்த மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தூர இடங்களில் இருந்து வந்து வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் வறிய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். [இ-111]

## யாழ். சுகாதாரச் சேவை ஸ்தம்பிதம் அடையும் நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்டத்துக்கு எரிபொருள் அனுப்பாததால் சுகாதாரச் சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகி இருக்கிறது.

இது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. ரஞ்சன் டி சில்வா சுகாதார அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் வைத்தியசாலைகளுக்குத் தேவையான எரிபொருள்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் அனுப்பப்படாததால் அம்புலன்ஸ் வாகனங்கள் இயங்க முடியாதுள்ளன என்றும், வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் வீணான உயிர் இழப்புக்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [இ-3]

## அலுவலகங்கள் இடமாற்றம்

நவாலி, மார்ச் 9

யாழ். செயலகத்தில் நீண்டகாலமாக ஒரே இடத்தில் இயங்கி வந்த சில காரியாலயங்கள் கடந்த 4 ஆம் திகதி முதல் செயலகத்தின் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள ஒய்வூதியத் திணைக்களப் பிரிவு, உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு, விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கும்—

விலைக் கட்டுப்பாட்டுப் [illegible] பிரிவிறகும்—

உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு கடன் வழங்கு சபை அலுவலகத்திற்கும் —

அபிவிருத்திச் சபை அலுவலகம் கடன் வழங்கு சபை இணைக்கும் —

கடன் வழங்கு சபை இளைப்பாற பென்சன் பண மீளளிப்புப் பிரிவிற்கும் —

பிரதான கணக்காளர் பிரிவு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. [இ-100]

## நூல் வெளியீடு

பல்வேறு மண் வளங்களைக் கதையாக்கிய பெருமைக்குரியவர் எழுத்தாளர் அகஸ்தியர். "அகஸ்தியர் கதைகள்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். தொடர்பகம் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு வெளியீட்டுரை நடத்திய பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்கு வண. ஜே. ஜ. ஜெயசீலன் அடிகள் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, புத்தொளி, இ. ஜெயராஜ் டானியல் அன்ரனி, க. கணேசலிங்கம் ஆகியோரும் விழாவில் உரை நிகழ்த்தினர். [அ-51]

## தடுப்பூசி போட ஏற்பாடு ஆனால் மருந்து வரவில்லை

யாழ். சுகாதாரப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகளை சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் தடுப்பூசி ஏற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினர் கொழும்பில் இருந்து மருந்தைக் கொண்டுவந்து தருவதற்கும் ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் மருந்து இன்னும் வந்து சேரவில்லை. இதனால் நாய்களுக்கு நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் வேலைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. [இ-18]

## குருநகர் மீனவர் புகார்

குருநகர், மார்ச் 9

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மீனவர்களினால் கடலில் இடப்படும் வலைகளின் மரக்கறித் தோட்டங்களுக்கு வேலி அடைக்க எடுத்துச் செல்லப்படுகின்றனவாம்.

இப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் குருநகர் மீனவர்கள் இது தொடர்பாக வேலணை தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளருக்கும், மண்கும்பான் சிற்றூரவையினருக்கும் முறையிட்டுள்ளனர்.

பட்டி வலைகளில் உள்ள நால், மீன் பிடித்துச் செல்லப்படுவதாகவும்-

வலை பாய்ந்துள்ள கம்புகள் பிடுங்கப்படுவதாகவும் எடுத்துச் செல்லப்படுவதாக வும் புகாரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-51]

## மாற்றமில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிர்மாணத் திணைக்களத்திற்கு பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிக்கும் பொறுப்பு மாற்றப்படவில்லை.

கல்விப் பகுதியின் கீழ் இயங்கும் கட்டடப் பிரிவே தொடர்ந்தும், பாடசாலைகள் சம்பந்தப்பட்ட நிர்மாண வேலைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் என அறிவிக்கப்படுகிறது. [க]

## புதிய அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 9

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவுக்கு கொழும்பிலிருந்து புதிய அம்புலன்ஸ் ஒன்று கிடைத்துள்ளது.

இந்த அம்புலன்ஸை ஜப்பான் அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வலி. வடக்குப் பகுதிகளில் காயமடையும் பொதுமக்களை விரைவாக வைத்தியசாலைக்கு ஏற்றிவர வசதியாக இந்த அம்புலன்ஸ் கொல்லாமுப் பிள்ளையார் கோவிலடியில் நிறுத்தி வைக்கப்படும் எனச் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ 5]

## புனருத்தாரண கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத்தின் புனருத்தாரணக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

## சிறுதானியப் பயிர்கள் குரங்குகளினால் நாசம்

தென்மராட்சி, மார்ச் 9

பளை, கச்சாய் வெளிப் பகுதிகளில் குரங்குகளினால் சிறுதானியப் பயிர்கள் நாசமாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

குரங்குகள் கூட்டம், கூட்டமாக வந்து பயிர்களைப் பிடுங்கி நாசம் செய்கின்றன. இவற்றைத் துரத்த வருவோரை அவை கடிக்கவும் முனைகின்றன. [இ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செலெர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4½ பரப்புக் காணியும், வேதமெஷின்கள், தகடு வெட்டும் கட்டர், என்பனவும் விற்பனைக்கு உண்டு. பரஸ்சோதி ஸ்தாபனம், மந்திரிமனைச் சந்தை, நல்லூர் [16038]

கருவாட்டுக்கு தேவையான அரைத்த உப்பு எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் ஸ்ரீ சயிலில், 76[222] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [16 62]

பல்லாரி வெங்காய விதை டெப்போ தென்னகத்தின் மிகச் சிறந்த B வெங்காய விதை எம்மிடம் கிடைக்கும். முகவரி: சிவா வச் வேக்ஸ் 185, நவீன சந்தை யாழ்ப்பாணம். [16071]

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இ. வீரசாமி, 131/1, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். [16078]

## தேவை

யாழ் நகரில அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) தேவை. முன் அனுபவம், தகைமைகளுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: 188, மே/பா உதயன். [சி/5824]

இலுப்பை அரைப்புத் தேவை. தொடர்பு: மில்க் வைற், யாழ்ப்பாணம் [சி/5828]

## தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் புவனேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை இல. 375952718 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் பப்ளிகேசனில் ஒப்படைக்கவும். [15698]

பரராஜசிங்கம், உதயகுமார், பரராஜசிங்கம், பிரேமகுமாரி ஆகிய இருவரது அடையாள அட்டைகளும் வெளிநாட்டு [டோகா] சாரதி லைசென்சும் கேரதீவுக்கும், முருசண்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 42, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16077]

## வகுப்புகள்

உயர்தர 1990, 1991 பரீட்சைகளுக்கான தூய, பிரயோககணித மீட்டல் வினாவிடை கலந்து ஆராய்தல். சிறு குழுக்களாக ஆர்வமுள்ள மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்படும். விவரங்களுக்கு: ஆ. இராசசிங்கம், 830[474], நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16076]

## மணமகன் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய A/L படித்த மணமகளுக்கு வங்கி, அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை [நாவில் செவ்வாய்] தகுதிக்கேற்ற சீதனம் கொடுக்கப்படும். குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 185, C/o உதயன். [16032]

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம், 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16037]

## நோவு வைத்தியம்

நட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ்ரீ மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [16014]

## பெற்றுக்கொள்ளவும்

வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவது எம்மிடம் நீங்கள் திருத்தக் கொடுத்த கைக்கடிகாரங்களை ஒரு வார காலத்திற்குள் பெற்றுக் கொள்ளவும். சிவா வாச் வேக்ஸ், 185, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [16072]

## சீமெந்து ஊழியருக்கு சம்பளம்

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான சம்பளம் நாளை மறுதினம் திங்கட்கிழமை வழங்கப்பட இருக்கிறது.

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் தற்காலிகமாக இயங்கி வரும் அலுவலகத்தில் திங்கள் காலை 8 மணியளவில் சம்பளம் வழங்கப்படும் என்று நிர்வாக முகாமையாளர் அறிவித்துள்ளார். [ஒ]

## அறிவித்தல்

### கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை.

**அன்புடையீர்!**

அம்பாள் ஆலயத்தின் நிர்வாகம் சம்பந்தமாக உத்தேச குழுவைத் தெரிவுசெய்ய 1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10ஆம் திகதியில் ஒரு பொதுக்கூட்டம் சட்ட விரோதமாகவும் கூட அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாலய பரிபாலனம் நம்பிக்கைச் சொத்துச் சட்டம் 113ஆம் பிரிவின் கீழும் 75ஆம் பிரிவின்கீழும் பொதுச்சபையால உறுதிமூலம் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களாலே பரிபாலன சபையின் உதவியுடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

சில நபர்கள் தன்னிச்சையாக ஒரு கூட்டம் கூடி நம்பிக்கைச் சொத்துச் சட்டத்திற்கு மாறாகவும் 1943ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் மு. மதியாபரணம் அத்தாட்சிப்படுத்திய 194ஆம் இலக்க உறுதியினதும், 1952ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 1?ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பொ. கங்கையர் அத்தாட்சிப்படுத்திய 3816-ம் இலக்க உறுதியினதும் கோட்பாடுகளுக்கு முரணாகவும் செயற்பட்டு எடுக்கும் நடவடிக்கைகள் செல்லுபடியாகாதவை எனவும், அவற்றை இவ் ஆலயத்தின் நன்மை கருதி இவ் தர்மசபை எதிர்க்கும் என்பதையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

அடியார்களுக்கு உண்மையான தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு நியாயமான கோரிக்கைகள் இருப்பின் நம்பிக்கைச் சொத்துச்சட்டம் 102 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதே சட்ட முறையும் ஒழுங்கும் ஆகும். வன்மமாக நிர்வாகத்தை கைப்பற்றுவதற்கு எவர் முன்வந்தாலும், அதை அம்பாள் கட்டளைப்படி தர்மகர்த்தா சபை எதிர்க்கும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

எனவே, மனுச்சுத்தியுடன் எல்லா ஆலய நலன் விரும்பிகளும் செயற்படுமாறு ஆலய தர்மகர்த்தா சபை கோருகின்றது.

இங்ஙனம்,
தர்மகர்த்தா சபை சார்பில்,
கந்தையா இராமநாதன்.

[16079]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

### இருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

[வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவன்]



மலர்வு:
30 — 12 — 1963

உதிர்வு:
22 — 2 — 1987

இறைவனது திருவடிக்கு
மாலை கட்டி
இறைவனது திருவடியில்
மாலையாகிவிட்ட
பூ மலரே!

எம் குடும்ப முதல் மகனாய் எமதுள்ளம் மகிழ வைத்த இந்த தோவறி பெற்றெடுத்த தாய், தந்தையர், உடன் பிறந்த சகோதரர்கள் எம்மை தவிக்கவிட்டு பெருவாழ்வு பெற்று விட்டீர்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

அன்புடன் நினைவு கூருவோர்!
தந்தை கிருஷ்ணபிள்ளை தாய் இந்துராணி,
சகோதரர், சகோதரிகள்.
[16075]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கா. க. விசுவலிங்கம்

[முன்னைநாள், யாழ்ப்பாணம் பழக்கடை வர்த்தகர்]

பூவுலகு: 27 - 04 - 1924
பொன்னுலகு: 07 - 02 - 1991

பாச ஒளியைப் பரப்பி எம்மைப் பாங்குடன் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! காததூரம் இருக்கும் அன்புச் செல்வங்கள் உங்கள் பூதவுடலைக் காணாத பாவிகளாகிவிட்டார்கள். காலன் உங்களைக் கவர்ந்து சென்று மாதம் ஒன்று மறைந்தது ஐயா! மாதம் ஒன்று சென்றாலும் எம் மனதை விட்டு உங்கள் நினைவு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இன்று 09 - 03 - 91 சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆன்ம சாந்திப் பூசையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேலணை - 5 [09 - 03 - 1991] [16068]

## பழுதடையும் நிலையில் மா

நெடுந்தீவு, மார்ச் 9

கடந்த வருட இறுதியில் கப்பல் மூலம் நெடுந்தீவுக்கு எடுத்துவரப்பட்டு இங்கு களஞ்சியப்படுத்தப்பட்ட மா தற்சமயம் பழுதடையத் தொடங்கி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே பெருந்தொகையான மா மூடைகள் இங்கிருந்து குறிகாட்டுவானுக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. மா உட்பட மிகுதி உலர் உணவுகள் நிவாரணத்துக்கென நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மாவே தற்போது பழுதடையும் நிலையில் உள்ளது. [இ-111]

## தேசியக் கல்வி நிறுவனம், மஹரகம கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான போதனாசிரியர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

கல்வி முதுமாணிப் பட்டதாரிகள் அல்லது கல்வி டிப்ளோமா பயிற்சியில் திறமைச் சித்தி/விசேடசித்தி பெற்றவர்களே இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் 22 - 03 - 1991 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக, கல்வி முகாமைத்துவ ஆலோசகர், கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுமையான சுயவிவரங்கள் கொண்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் அவசியம்.

கலாநிதி திருமதி பி. காரியவாசம்,
கல்வி மா அதிபதி, ஆசிரியர் கல்விப் பிரிவு,
தேசிய கல்வி நிறுவனம், மஹரகம.
[சி/5829]

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### வீரசிங்கம் லோகேஸ்வரன்

[வடபிராந்திய போக்குவரத்துச் சபை, சாரதி கோண்டாவில்]

தோற்றம்: 02 - 05 - 1943
மறைவு: 07 - 02 - 1991

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், அந்தி பகலாய், அயராது உழைத்து எம்மை வாழவைத்து ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள், நண்பர்கள்.

"சிங்கன் வீடு"
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [16009]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மாணவருக்காக பாடசாலைகளில் கொட்டில்கள்

## சில பாடசாலைகளை ஒரு நேரமாக இயக்கவும் முடிவு

பாடசாலைகளில் விசேஷ வசதிகளை செய்வதன் மூலம் இடம்பெயர்ந்த மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளைச் சமாளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது இரு நேரமாக இயங்கும் சில பாடசாலைகளை ஒரே நேரமாக இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்காக பாடசாலைகளில் கொட்டில்கள் அமைக்கப்படும்.

இடம்பெயர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள், மற்றும் பாடசாலைகளில் உணவு உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடந்த இந்த கலந்துரையாடலில் கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர், விவசாய உத்தியோகத்தர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

★ குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகளைச் சேர்த்து ஒரே பாடசாலையாக இயங்க வைப்பது.

★ ஆசிரியர்களது எண்ணிக்கையைப் பொறுத்து அவர்களைக் கோட்ட மட்டத்தில் இடமாற்றம் செய்வது.

★ இடம்பெயர்ந்த அகதிகள் தங்கியிருந்த பாடசாலைகளுக்கு வர்ணம் பூசுதல், மற்றும் சுகாதார உதவிகளை வழங்கல்.

★ ஆசிரியர்களையும், மாணவர்களையும் தமக்குத்தெரிந்த அளவுக்கு உணவு உற்பத்தியில் ஈடுபடச் செய்வது.

★ உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் சந்தைப் படுத்துதல். இலாபங்களை மாணவருக்கும், பெற்றோருக்கும் பகிர்ந்தளித்தல்.

[இ-5]

## வெள்ளத்தால் வீடிழந்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 492 குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது. 27 லட்சம் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை கிளிநொச்சி அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி இறுதிப் பகுதியில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் இந்தக் குடும்பங்கள் வீடுகளை இழந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்த மருத்துவ கலந்துரையாடல்

கைதடியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவதுறையில் சகல சித்த மருத்துவ வைத்தியர்களும் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் நாளை 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இன்றைய நிலையில் சித்த மருத்துவர்களின் நிலை சித்த மருத்துவத்துறையின்வளர்ச்சி தற்போதைய சூழ்நிலையில் சித்தமருத்துவத்துறை மக்களுக்கு ஆற்ற வேண்டியசேவை என்பன பற்றி இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட உள்ளது.

சகல சித்த வைத்தியர்களையும், மறுமலர்ச்சிக்கழக முக்கியஸ்தர்களையும், ஆய்வு நிறுவன முக்கியஸ்தர்களையும், மற்றும் சித்தமருத்துவத் துறையில் அக்கறை உள்ள கல்விமான்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

[இ]

## புதுக்குடியிருப்பில் வடிசாலை

ஒட்டுசுட்டான், மார்ச் 9

வடமாகாண தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் புதுக்குடியிருப்பில் ஒரு வடிசாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்த வடிசாலையில் சீனியை உற்பத்தி செய்து வரும் கழிவுப் பாகிலிருந்து மதுசாரம் வடிக்கப்படும்.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள தெ. ப. பொ. உ. கூ. சங்கங்களின் முதலீட்டில் இந்த வடிசாலை நிர்மாணிக்கப்பட்டு வருவதாக கூ. உ. ஆணையாளர் திரு. ரீ. சபாரத்தினம் தெரிவித்தார்.

[இ-113]


### ஆங்கிலப் பேச்சு வன்மை ELOCUTION பரீட்சை

1990 ஆம் ஆண்டின் பரீட்சை சான்றிதழ்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன. பிள்ளைகளின் பெற்றோர்களை, 17 - 03 - 91 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அளவெட்டி மகாஜன சபையில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சி. சிவமகாராஜா

தலைவர்.

[சி/5827] தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.


## பரிசு வழங்கும் நிகழ்ச்சி

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான, பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சி, இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

[இ]

## மண்எண்ணெய், உரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கந்தரோடை விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் அரை அந்தர் உரம், ஒன்றரை லீற்றர் மண்எண்ணெய் மற்றும் கௌபீ, பயறு, உழுந்து ஆகியவற்றை வழங்கினர்.

கந்தரோடை சிற்றூர் அவையினரின் உதவியுடன் கந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலையில் வைத்து இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

[இ-90]

## பாதிப்பு

அராலித்துறையில் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், தாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தங்களுக்கு நிவாரணம் தருமாறும் யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

விமானக் குண்டு, ஹெலித் தாக்குதல் காரணமாக அராலித்துறையில் உள்ள மீனவர் தங்குமடம் சேதமுற்றுள்ளது என்றும் -

தொழிலாளர்கள் இப்போது கடலுக்குச் செல்ல முடியாது உள்ளதாகவும் அராலித்துறை கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்திச் சங்கம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

[அ]

## பனம் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்குத் திட்டம்

அராலி, மார்ச் 9

இறக்குமதி செய்யப்படும் சீனிக்குப் பதிலாக பனம் சீனியை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காக சீவல் தொழிலில் 6 மாதப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. [இ-12]

## வேலணையில் காடுவளர்ப்பு நன்னீர்க் கிணறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காடுவளர்ப்பு, மற்றும் நன்னீர் நிலைகள் அமைக்கும் திட்டத்துக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து சுமார் 45 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். தனபாலசிங்கம் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளார்.

வேலணை சாட்டிப் பகுதியில் நன்னீர் பொதுக் கிணறுகளை அமைத்து புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணை, சரவணை ஆகிய பகுதிகளுக்கு வரட்சிக்காலத்தில் நீர் விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[இ-ரி]

## ரஞ்சனைக் கொன்ற குண்டு அளவில் மிகப் பெரியதாம்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட குண்டு இலங்கையில் இதுவரை பயன்படுத்தப்படாத அளவு பெரியதாக இருந்திருக்கும் என்றும்—

அக்குண்டில் 80 கிலோ வெடி மருந்து இருந்ததாகவும் தெரிய வருகிறது.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார். [ஒ-எ]

## வார்ட் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 9

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையின் ஆண், பெண் நோயாளர் வைத்திய வார்ட் மூடப்பட்டுள்ளது.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அனைத்து நோயாளிகளும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும், சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

வைத்திய சாலையின் மலசல கூடங்கள் பாவிக்க முடியாத அளவிற்கு அடைப்பு ஏற்பட்டு திருத்த வேலைகள் செய்யமுடியாத நிலையில் உள்ளதாலேயே இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [இ - 15]

### மரண அறிவித்தல்

**V. J. மெயிற்லன் (றொபேட்)**

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், காலஞ்சென்ற ஏகாம்பரம், 15/2, தலையாளி லேனில் இருந்தவருமாகிய மெயிற்லன் 07 – 03 – 91 பி. ப. 3.00 மணியளவில் அகால மரணமானார்.

அன்னாரின் புகழுடல் இன்று காலை 9.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக மல்வம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

T. புவனசிங்கி.

டச்சு றோட்,
உடுவில். [16081]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 லட்சம் கிலோ தேயிலை தேக்கம்;

# ஸ்ரீலங்கா அரசு திணறுகின்றது!

கொழும்பு, மார்ச் 9

வளைகுடாப்போர் நெருக்கடியால் ஸ்ரீலங்காவின் தேயிலை ஏற்றுமதி பெருமளவு வீழ்ச்சியடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உரிய விலை கிடைக்காததால் 20 லட்சம் கிலோ தேயிலை தேங்கிக் கிடக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் ஸ்ரீலங்கா அரசு திணறிக்கொண்டிருக்கிறது.

ஏலத்திக்குக் கொண்டுவரப்பட்ட இந்த தேயிலை உரிய விலை கிடைக்காததால் விற்பனை செய்யப்படாமல் வாபஸ் பெறப்பட்டதாக தேயிலைச் சபைத் தலைவர் சேபால இலங்கக்கோன் தெரிவித்தார்.

உற்பத்திச் செலவுக்குரிய விலைகூட இந்தத் தேயிலைக்கு கிடைக்கவில்லை என்றார் அவர்.

தேயிலை விற்பனையாகாத போதிலும் அதன் உற்பத்தியாளர்களுக்கு 12 கோடி ரூபா முற்பணமாகச் செலுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். (உ-3)

## கொழும்பில் சார்க் மாநாடு நவம்பரில் நடக்கும்

கொழும்பு, மார்ச் 9

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் ஆறாவது உச்சிமாநாடு எதிர் வரும் நவம்பர் மாதம் 7, 8, 9 ஆம் திகதிகளில் கொழும்பு. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தேவையேற்படும் பட்சத்தில் நவம்பர் 10 ஆம் திகதிக்கு இம்மாநாடு நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சார்க் அமைப்பில் உள்ள நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து உள்ளனர்.

மாநாட்டிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள பத்துக் குழுக்களை இலங்கை அரசு நியமித்துள்ளது. (ஒ-எ)

## ராஜீவ் தலைமையில் நேர்மையான தேர்தலா?

### நடக்காது என்கிறார் கலைஞர்

ராஜீவ் காந்தி தலைமையில் காபந்து அரசு அமைக்கப்பட்டு, அதன் கீழ் பொதுத் தேர்தல் நடைபெற்றால் அது நேர்மையானதாக இருக்காது.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி முன்கண்டவாறு நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி தலைமையில் காபந்து அரசு அமைக்கப்படும் எந்த முயற்சியையும் தாம் முழு அளவில் எதிர்ப்பதாகவும் திரு. கருணாநிதி சொன்னார். [ஒ-எ]

## இந்திய அரசியல் நெருக்கடி; தீர்க்க பல்வேறு முயற்சிகள்

புதுடில்லி, மார்ச் 9

பிரதமர் சந்திரசேகரின் ராஜினாமாவைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் புதுடில்லியில் நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன.

நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா ஜனாதிபதி வெங்கட்ராமனை நேற்று சந்தித்து அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய இடைக்கால வரவு செலவு அறிக்கை மற்றும் அம்சங்கள் பற்றி விளக்கம் அளித்தார்

பின்னர் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி ஜனாதிபதியைச் சந்தித்தார்.

அதன் பின்பு செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அத்வானி இடைக்காலப் பொதுத் தேர்தல் ஒன்றை நோக்கி நடவடிக்கைகள் போய்க் கொண்டிருப்பதாகத் தாம் உணர்வதாக தெரிவித்தார்.

இதே நேரத்தில் — தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழி வகைகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி வெங்கட்ராமன் நேற்றும் சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இப்பத்திரிகை நியூ உதயன் புப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குடாநாட்டில் மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்று குடாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

யாழ். பல்கலைக்கழகம் மற்றும் பல பாடசாலைகளில் கருத்துரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த மகளிர் தின நிகழ்ச்சியில் கல்விமான்கள் பலரின் கருத்துரைகள் இடம்பெற்றன.

மகளிர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த அறிக்கை பல இடங்களிலும் ஒலிபரப்பப்பட்டது. [ஒ-3]

## மாணவர்களின் உணவு முத்திரை வருகிறது

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரை அடுத்த வார முடிவில் கப்பலில் வந்து சேர இருக்கிறது. [ஒ-3]

## கண்காட்சி நீடிப்பு

கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு ஒழுங்கு செய்து யாழ். நகரத்திலுள்ள மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தி வரும் கல்விக் கண்காட்சியும், விற்பனையும் நாளை ஞாயிறு வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

இரவு நேரத்தில் தண்ணீர் அள்ளச் சென்ற பெண்மணி கிணற்றில் விழுந்து பலியானதாகக் கூறப்படும் சம்பவம் அண்மையில் சாவகச்சேரியில் நிகழ்ந்துள்ளது.

சாவகச்சேரி கோயில் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த அலோசியஸ் மேரியம்மா என்பவரே பலியானவராவர். [30]

## மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ய-ம]

## தமிழ் இளைஞர்கள் மீது ஆயுதபாணிகள் கண்!

யாழ்ப்பாணம், மார்ச் 9

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தங்கியிருக்கும் விடுதிகளை தமிழ்க் குழு ஒன்றின் ஆயுதபாணிகள் அடிக்கடி நோட்டம் விட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் இளைஞர்களின் நடமாட்டங்களையும் சம்பந்தப்பட்ட குழுவினர் இரகசியமாகக் கண்காணித்து வருவதாகவும் அறியவருகிறது.

இதனால் கொழும்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் அச்சத்துடன் காலத்தைக் கழித்து வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். [ஜ-15]

## புரட்சியை அடக்க முயற்சி; சதாமின் கடைசித் தவறாம்!

தெஹ்ரான், மார்ச் 9

மக்கள் புரட்சியை அடக்க முயற்சிப்பது ஜனாதிபதி சதாம் ஹுசேன் விடும் கடைசித் தவறாக இருக்கும்

ஈரான் ஜனாதிபதி ரஃப்சன் ஜானி நேற்று (வெள்ளிக்கிழமை) பிரார்த்தனையில் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு எச்சரித்தார்.

ஈராக் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர் என்றும், அதற்கு வழிவிட்டு சதாமின் ஆளும் பாத் சோஷலிசக் கட்சி ஆட்சியில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் ஈரான் ஜனாதிபதி மேலும் சொன்னார்

ஈராக்கின் உள் விவகாரத்தில் ஈரான் தலையிடுகிறது என்ற ஜனாதிபதி சதாமின் குற்றச்சாட்டையும் ரஃப்சன் ஜானி நிராகரித்தார்.

இதே வேளை —

சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தெற்கு ஈராக்கின் பல பகுதிகளில் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையில்— ஈராக்கில் உள்ள குர்டிஷ் இன போராளிகள் தங்கள் பிரதேசத்தைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டனர் என்று அறிவித்து உள்ளனர்.

## பாரதீய ஜனதாவும் 500 தொகுதிகளில் போட்டி

புதுடில்லி, மார்ச் 9

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி நானூற்றி ஐம்பது முதல் ஐந்நூறு தொகுதிகளில் தனித்துப் போட்டியிடும்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி முன்கண்டவாறு சொன்னார்.

கூட்டணி அரசு அமைக்க பாரதீய ஜனதாக் கட்சி ஒருபோதும் முயற்சிக்காது என்று கூறிய திரு. அத்வானி சில தொகுதிகளில் ஏனைய கட்சிகளுடன் தொகுதி உடன்பாட்டை தமது கட்சி செய்துகொள்ளக் கூடும் என்றும் சொன்னார்.

## இலவச பாட நூல்கள்

மானிப்பாய், மார்ச் 9

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவசப் பாடநூல்கள் கோட்டரீதியாக வழங்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் இருந்து ஒவ்வொரு கோட்டத்துக்கும் தேவையான இலவச நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [இ-90]

## 6 கட்ட நிவாரணம்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் இறக்கப்பட்டு, அவை எடுத்து வரப்பட்டதன் பின்னர்— அதாவது 15 ஆம் திகதி அளவில் உணவு விநியோகத்தை ஆரம்பிக்க முடியும் என்றும் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

ஆறாம் கட்ட உலர் உணவு நிவாரணத்தை வழங்குவதற்கும் போதிய உணவுப் பொருள் கையிருப்பில் இல்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்திருந்தது கடந்த 28 ஆம் திகதிய உதயனில் வெளிவந்திருந்தது தெரிந்ததே. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org